# LAABH SAMACHAR


லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்

Volume: 14 | Issue : 07 | OCTOBER 2025 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE








Release of Laabh Samachar Magazine by Honourable Finance Minister Smt. Nirmala Sitaraman


An inspiring meeting with Honourable Finance Minister Smt. Nirmala Sitaraman


Program on Benefits of GST 2.0


SCC Team Meeting with Chairman of TN State Minority Commission Rev.Fr. Joe S. Arun


SCC - Annual General Body Meeting


KLNCE Professors & Students Meeting with SCC Team for Startup Activities


அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


GSTIN: 33ALZPD4776G1ZO
மல்லிகை
The Mart
GROCERY / TOYS / STATIONERY / GIFTS
Online Delivery : 9345910000
No. 198-A, South Masi Street, Madurai - 625001.


Ananda Nilayam
Mayflower
The Banquet Hall A/C
Location - Google Map
Marriage Function
Betrothal
Naming Ceremony
Birthday Party
Puberty
Get-to-gether
Hall available for all type of functions
Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001
For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583

# தலைவர் அறிக்கை

**அஸ்கிதெஞ்கோ மொன்னு பொறெ**

**நமஸ்கார்...**

K.K. தினேஷ், தலைவர்

சென்ற மாதம், ஜிஎஸ்டி 2.0 அறிவிப்புக்கு மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு நிர்மலா சீதாராமன் அவர்களை நேரில் சந்தித்து நன்றி கூறும் வாய்ப்பாக கிடைத்தது, மகிழ்ச்சியளிக்கிறது. அந்தப் பொன்னான தருணத்தில், செப்டம்பர் மாத லாப் ஸமாச்சார் இதழ் அவரது கரங்களால் வெளியீடு செய்யப்பட்டதுடன், புவிசார் குறியீடு பெற்ற சுங்குடி உற்பத்தித் தொழிலின் இன்றைய நிலையை எடுத்துக்கூறவும் வாய்ப்பாக இந்த சந்திப்பு அமைந்தது. விரைவில் அந்தத் துறைக்கான வளர்ச்சித்திட்டங்கள் அறிவிக்கப்படும் என்று நம்புகிறேன்.

சிறுபான்மை மொழிப்பட்டியலில் நம் ஸௌராஷ்ட்ர மொழியும் இடம்பெற்றுள்ளது. அதற்கு தமிழக அரசின், சிறுபான்மைத் துறையின் கீழ் பல்வேறு அடிப்படைச் சலுகைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்துவரும் வழக்கறிஞரும், திமுக கட்சி மதுரை நிர்வாகியும், சேம்பர் உறுப்பினருமான திரு. ஓ.பி. திலீபன் சக்கரவர்த்தி அவர்களுக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது. நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மற்றும் நம் சேம்பர்-ன் தாய்க்கழகமான ஸௌராஷ்ட்ர சமூக நலப்பேரவையும் இணைந்து சென்ற மாதம், மதுரைக்கு வருகை தந்த சிறுபான்மைத்துறை கமிஷனர் அருட்தந்தை. ஜோ. அருண் அவர்களை நேரில் சந்தித்து மனு அளித்தது. இட்காட் முன்னாள் நிர்வாக இயக்குநர் திரு. எஸ்.ஆர். நாகேஸ்வரன் அவர்களும் உடன் இருந்தார். இந்த சந்திப்பு நம் மொழி வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று நம்புகிறோம்.

கே.எல்.என். பொறியியற் கல்லூரியுடன் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளதன் அடிப்படையில், இந்த அக்டோபர் மாதம், கல்லூரிப் பேராசிரியர் மற்றும் மாணவர்களுடன் சேம்பர் நிர்வாகிகள் ஆலோசனை நடத்தினர். அதில், ஸ்டார்ட்அப் ஏற்பாடுகளுக்கு, மாணவர்களின் திறனில் உருவான தயாரிப்புகள் பற்றியும், வேலை வாய்ப்பு பற்றியும், தொழிற்சாலை ஆய்வு போன்றவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

2024-2026 நிர்வாகம் பொறுப்பேற்று ஓராண்டை நிறைவு செய்துள்ளது. அரங்கம் நிறைந்த தொழில் கூட்டங்கள், 200க்கு மேற்பட்ட புதிய உறுப்பினர்கள் இணைந்த பொலீம் நிகழ்ச்சி, பெரும் ஆதரவுடன் நடைபெற்ற வர்த்தக கண்காட்சி போன்றவை இந்த நிர்வாகத்தின் வெற்றி. அடுத்த ஓராண்டு மேலும் பல்வேறு சாதனைகளுடன் சேம்பர் இயங்க அனைவரின் ஆதரவை கேட்டுக்கொள்கிறேன். நன்றி

## SOURASHTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |


| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**19.09.2025** – மதுரைக்கு வருகை தந்த மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களை சேம்பர் நிர்வாகிகள் வரவேற்று, ஜிஎஸ்டி 2.0 அறிவிப்புக்கு நன்றி தெரிவித்தனர். மேலும், செப்டம்பர் மாத லாப் ஸமாச்சார் இதழ் வெளியீடு செய்யப்பட்டது.

**21.09.2025** – சிறுபான்மை மொழியின் அடிப்படையில் உள்ள நமது ஸௌராஷ்ட்ர மொழிக்கு அதற்குரிய சலுகைகளைப் பெற வேண்டி, அத்துறை சார்ந்த கமிஷனர் திரு. ஜோ. அருண் அவர்களை சேம்பர் நிர்வாகிகள் சந்தித்து மனு அளித்தனர்.

**23.09.2025** – நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் 18ம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் காலை 10.45 மணிக்கு ஸௌ. சேம்பர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அங்கத்தினர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். அனைவரின் ஒப்புதலுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**03.10.2025** – கே.எல்.என். பாலிடெக்னிக் கல்லூரியின் செயலாளர் திரு. கே.பி. ராதாகிருஷ்ணன் அவர்களின் மறைவுக்கு இறுதி ஊர்வலத்தில் சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**05.10.2025** – சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. கோபிசன் அவர்களின் இல்ல உபநயன விழாவில் சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு வடுவை வாழ்த்தினர்.

**07.10.2025** – ஜிஎஸ்டி 2.0 பற்றிய மாதாந்திர சிறப்புக்கூட்டம் சேம்பர் அரங்கில் நடைபெற்றது. இதுபற்றி விளக்கமளிப்பதற்காக Chartered Accountants, BSL Associates, Partners திரு. G. சரவணக்குமார் மற்றும் திரு. J. பால சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். சேம்பர் ஜிஎஸ்டி ஆலோசனைக்குழு சேர்மன் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**09.10.2025** – கே.எல்.என். பொறியியல் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள், நமது ஸௌ. சேம்பர் நிர்வாகிகளுடன் ஸ்டார்ட்அப் முயற்சி குறித்து கலந்துரையாடினர்.

நன்றி



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

நமது லாப் ஸமாச்சார் இதழ் மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களின் கரங்களால் சென்ற மாதம் வெளியீடு செய்யப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது. இது லாப் ஸமாச்சார் வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய சாதனை, இதழுக்குக் கிடைத்த மிகப்பெரிய பெருமை.

ஜிஎஸ்டி 2.0 அறிவிப்பால், 22.09.2025 முதல் பல்வேறு பொருட்களின் விலை குறைந்துள்ளதை காண முடிகிறது. தொழில்துறையினர் பலர் தங்கள் தயாரிப்புப் பொருட்களுக்கான விலையை குறைத்துள்ளனர். மத்திய அரசு, அறிவிப்போடு நில்லாமல், நடைமுறையில் அதனை கண்காணிப்பது பாராட்டத்தக்கது. நமது பாரதப்பிரதமருக்கும், ஜிஎஸ்டி கவுன்சிலுக்கும் நன்றி.

மொழிவாரி சிறுபான்மை இனமாக உள்ள நமது ஸௌராஷ்ட்ர மொழிக்குரிய சலுகைகளைப் பெறுவதற்கு, இத்துறை சார்ந்த கமிஷனர் திரு. ஜோ. அருண் அவர்களை சந்திக்க உதவிய வழக்கறிஞர் திரு. ஓ.பி. திலீபன் சக்கரவர்த்தி அவர்களுக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது. இது தொடர்பாக சமூக அமைப்புகளுடன் நமது சேம்பர்-ம் மனு அளித்துள்ளது. விரைவில் அதற்கான பலன் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

### திருக்குறள்

**பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்**
**பேரா இடும்பை தரும்**

**பொருள்:** பெரியோருடைய ஆலோசனையைக் கேட்டுக் கொள்ளாமல் அவர்களை அலட்சியம் செய்துவிட்டால் பிறகு அந்தப் பெரியவர்களே முயன்றாலும் மாற்ற முடியாத துன்பங்கள் வந்துவிடும்.

அதிகாரம் 90 பெரியாரைப் பிழையாமை அங்கவியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544


Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear, ANAND, Viking, Prithvi INNER WEARS, NAIDU HALL THE FAMILY STORE, JOCKEY INNER WEAR, Poomex, MANGAI NIGHTIES, RASATHE DARLING NIGHTIES, YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay, PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.

THE BABY SHOP
அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங், மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402




Best Compliments from

# BVK GROUP

FINANCE | LAND | SUN | WIND

Shri. **Bala V Kutti**
*Chairman, BVK Group*

Indowind Energy Ltd
Indus Finance Ltd
EverOn Power Ltd
BeKae Props. P Ltd
BVK Foundation

603, Keshava, BKC,
Mumbai - 400 051.
Kothari Building 4th Floor,
114, M.G. Road,Nungambakkam,
Chennai - 600 034.





## GUEST HOUSE

AVAILABLE ON RENT

@ COURTALLAM

BeKae Props. P Ltd

No.162, Courtallanather Main Road, Courtallam.
(Opp to Sri Parasakathi College for Women)

DAILY & WEEKLY BASIS | SINGLE / DOUBLE Rooms with Hall

Contact: S.Kumar 98849 19918

# ஜிஎஸ்டி 2.0

## மாதாந்திர கூட்ட நிகழ்ச்சி



மத்திய அரசின் சமீபத்திய ஜிஎஸ்டி 2.0 அறிவிப்பு நாட்டு மக்கள் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ள இந்த சமயத்தில், இது தொடர்பான கூட்டம் 07.10.2025 அன்று மாலை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ல் ஏற்பாடு செய்யப்பட்டது. ஜிஎஸ்டி 2.0 குறித்து விளக்கமளிப்பதற்காக Chartered Accountants, BSL Associates, Partners திரு. G. சரவணக்குமார் மற்றும் திரு. J. பால சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். சேம்பர் ஜிஎஸ்டி ஆலோசனைக்குழு சேர்மன் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

22.09.2025 முதல் மத்திய அரசு குறைத்துள்ள இந்த வரிவிகித மாற்றத்தால் பொது மக்களுக்கு இது மிகப்பெரிய பேரின்பத்தை அளித்தாலும், வணிகர்கள் நடைமுறையில், மாற்றம் செய்யும் முந்தைய தேதிகளுக்கும், பிந்தைய தேதிக்கும் எதிர்கொள்ளும் வரி விகித பிரச்சினைகளுக்கு அதாவது, இன்வாய்ஸ் தேதி, பில் டிஸ்கவுண்ட், ரீஃபண்ட், ஜஎம்எஸ் போன்றவைகளைப் பற்றி மத்திய அரசு தெரிவித்துள்ள மாற்றங்கள் மற்றும் வழிமுறைகளைப் பற்றி திரு. G. சரவணக்குமார் அவர்கள் மிகத் தெளிவான விளக்கங்களை அளித்தார்.

திரு. J. பாலசுப்பிரமணியன் அவர்கள், ஜிஎஸ்டியில் கொண்டு வரப்பட்டுள்ள சமீபத்திய வழக்குகள் மற்றும் தீர்ப்புகளின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டுள்ள மாற்றங்கள், நோட்டீஸ்களுக்கு வணிகர்கள் எதிர்கொள்ள வேண்டிய விதம் மற்றும் அபராத முறைகள் போன்றவைகளைப் பற்றி மிக அழகாக விவரித்தார்.

இருவரின் உரையின் நிறைவுக்குப் பிறகு, அங்கத்தினர்களின் சந்தேகங்களுக்கு பதலளித்தனர்.

ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக, சிறப்பு விருந்தினர்கள் இருவருக்கும் சிறப்பு நினைவுப் பரிசு (அவர்களின் உருவம் கொண்ட பென்சில் ஓவியம்) வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.




07.10.2025 அன்று கே.எல்.என். பாலிடெக்னிக் கல்லூரியின் செயலாளர் திரு. கே.பி. ராதாகிருஷ்ணன் அவர்களின் மறைவுக்கு ஸௌராஷ்ட் சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் மற்றும் அங்கத்தினர்கள் பலர் அவரின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.




21.09.2025 அன்று காலை 10.45 மணிக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 18ம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு, சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜி அவர்கள் 2024-25ன் வரவு செலவு கணக்கை சமர்ப்பித்தார். மேலும், புதிய உறுப்பினர்கள் அங்கீகரிக்கப்பட்டனர். பட்டயக்கணக்கர் மற்றும் அவரது கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. கூட்டத்திற்கு சேம்பர் அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டனர். கூட்ட நடவடிக்கைகள் அனைத்தும் வருகை தந்த அனைவரின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்டது.




09.10.2025 அன்று சேம்பர் நிர்வாகிகளுடன் கே.எல்.என். பொறியியல் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆலோசனைக் கூட்டம் சேம்பர் அலுவலகத்தில் நடைபெற்றது. இரு அமைப்புகளின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி அடுத்தகட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது.

# மத்திய அமைச்சர் கரங்களால் வெளியீடு செய்யப்பட்ட லாப்ஸமாச்சார் இதழ்




மதுரைக்கு விஜயம் செய்த மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களை வரவேற்கும் வகையிலும், ஜிஎஸ்டி 2.0 அறிவிப்புக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், ஜிஎஸ்டி 2.0 குறித்த தகவல்கள் கொண்ட நமது செப்டம்பர் மாத லாப் ஸமாச்சார் இதழை அவரது கரங்களால் வெளியிடும் நோக்கிலும் ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள் மற்றும் இதழ் குழுவினர் நேரில் சந்தித்தனர். பரபரப்பான சூழலில், நமது இதழை மத்திய நிதியமைச்சர் வெளியீடு செய்தது மிகவும் மகிழ்ச்சியாகவும், லாப் ஸமாச்சார் இதழுக்கு ஏற்றமும், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-க்கு பெருமையையும் சேர்த்துள்ளது. இந்த சந்திப்பின் போது, நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு நினைவுப் பரிசாக பூவிசார் குறியீடு பெற்ற சுங்குடி சேலை வழங்கப்பட்ட போது, அவர் கூறியது, நம்மை வியப்பில் ஆழ்த்தியது. இது குறித்த தகவல், அருகில் புகைப்படத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸௌராஷ்ட்ர சிறுபான்மை மொழிக்கான சலுகைகள் பெற நடவடிக்கைகள்



ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், ஸௌராஷ்ட்ர சமூக நலப்பேரவை இணைந்து, வழக்கறிஞர் திரு. ஓ.பி. திலீபன் சக்கரவர்த்தி உதவியுடன், மதுரைக்கு வருகைதந்த தமிழக சிறுபான்மை துறை ஆணையர் திரு. ஜோ. அருண் அவர்களை அமைப்பு நிர்வாகிகள் சந்தித்து மனு அளித்தனர். அதனை அவர் ஏற்றுக்கொண்டு, சிறுபான்மை மொழிக்குரிய சலுகைகள் ஸௌராஷ்ட்ர சமுதாய மக்களுக்குக் கிடைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். இந்த சந்திப்பை அவர் மகிழ்ச்சியாகவும் கருதினார். இட்காட் முன்னாள் நிர்வாக இயக்குநர் திரு. எஸ்.ஆர். நாகேஸ்வரன் அவர்கள் இந்த சந்திப்பல் உடனிருந்தார்.

# சுங்கிடி சேலைக்கு முக்கியத்துவம் அளித்த மத்திய நிதியமைச்சர்



மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு ஸௌ. சமூக நலப்பேரவைத் தலைவர் திரு. எஸ்.கே.ரமேஷ் அவர்கள் சுங்குடி சேலை வழங்குகிறார். உடன், தமிழக சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி ஸ்ரீநிவாசன் மற்றும் சுங்குடி புகழ் திரு. ஏ.கே. ரமேஷ்.

மத்திய அரசு சமீபத்தில் வரலாற்று சிறப்புமிக்க வரி குறைப்பு அறிவிப்பை வெளியிட்டது. இதனால் கடைக்கோடி மக்களும் மகிழ்ச்சியில் ஆழந்திருக்கிருக்கும் சூழலில், கடந்த 19ம் தேதி அன்று மதுரைக்கு வருகை தந்த மத்திய நிதியமைச்சரை நேரில் சந்தித்து கௌரவித்து நினைவுப் பரிசை வழங்க ஸௌராஷ்ட்ர சமூக மக்களின் சார்பாக ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மற்றும் ஸௌராஷ்ட்ர சமூக நலப் பேரவை நிர்வாகிகள் இணைந்து சந்தித்தனர்.

ஜி.எஸ்.டி., 2.0 மாபெரும் அறிவிப்புக்கு அமைப்பினர் நன்றி தெரிவித்து, நினைவுப் பரிசாக, சுங்குடி சேலையை அளித்தபோது, அதை பரிசாக பெற்றுக்கொள்ள மறுத்து, பணம் கொடுத்து வாங்கிக்கொள்ள விரும்புகிறேன் என்று கூறியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

மதுரையில் நடைபெற்ற முக்கிய அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு, சிறப்பு சந்திப்பில், சுங்குடி சேலையின் முன்னோடியாகத் திகழும், சாகம்பரி கிரஃப்ட் திரு. ஏ.கே. ரமேஷ் அவர்களின் தயாரிப்பில் உருவான இயற்கை சாயமிடப்பட்ட சேலை ரகங்கள் காண்பிக்கப்பட்டது. 20க்கும் மேற்பட்ட சேலைகளை அவர் பணம் கொடுத்து பெற்றுக்கொண்டார்.

அப்போது, இத்துறையில், 40 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வரும் திரு. ஏ.கே. ரமேஷ் அவர்கள், சுங்குடி சேலையின் பெருமைகளையும், புவிசார் குறியீடு பெற்றுள்ளதைப் பற்றியும் தெரிவித்தார். மேலும், இளைஞர்கள் பற்றாக்குறையால், சுங்குடி சேலை தயாரிப்பு சற்று பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதற்கு தக்க இடவசதியும், அரசின் ஆதரவும் இருந்தால் நிச்சயம், சுங்குடி சேலை தொழில் புத்துயிர் பெறும் என்றார். இதனை கவனத்துடன் கேட்டுக்கொண்டார். உடன் இருந்த கோவை சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி ஸ்ரீநிவாசன் அவர்கள் தமிழக தொழில்துறையின் கவனத்திற் கொண்டு சென்று, இடவசதி ஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்தது பெருமகிழ்ச்சியளிக்கிறது.

# பெண்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் மத்திய அரசு திட்டங்கள்

இப்பொழுது பெண்கள் சொந்தமாக தொழில் தொடங்கி, பல துறைகளில் முன்னேறி சாதனை படைத்தும் வருகின்றனர். சில பெண்கள் சொந்தமாக தொழில் தொடங்க வேண்டும் என்ற கனவுடன் வலம் வருகின்றனர். ஆனால் அப்படி ஆரம்ப கலத்தில் இருக்கும் பெண்களுக்கு மிக சிக்கலாக இருப்பது பணம்தான். அவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பை உண்டாக்க அரசு பல கடன் திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. அதைப் பற்றி இனி விரிவாகப் பார்க்கலாம்.

பெண்கள் குறைந்த வட்டியில் உடனடி கடன் வழங்கு அரசு திட்டங்கள்!

1. எஸ்/எஸ்டி பெண் தொழில்முனைவோர் திட்டம்

2. அன்னபூர்ணா திட்டம்

3. ஸ்டாண்ட் அப் இந்திய திட்டம்

4. பெண்களுக்கான முத்ரா யோஜனா திட்டம் (PMMY)

### எஸ்சி/எஸ்டி தொழில்முனைவோர் திட்டம்

2025ம் ஆண்டு மத்திய பட்ஜெட்-ல் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம், எஸ்சி/எஸ்டி இனத்தைச் சேர்ந்த முதல் முறையாக பெண் தொழில்முனைவோருக்கு ரூ. 2 கோடி வரை டேர்ம் லோன் - காலக்கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்த திட்டம் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 5 லட்சம் தொழில்முனைவோரை ஆதரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

### அன்னபூர்ணா திட்டம்:

கேட்டரிங் சேவைகள் அல்லது சிறிய உணவு விற்பனை நிலையங்கள் போன்ற உணவு தொடர்பான வணிகங்களைத் தொடங்க அல்லது விரிவுபடுத்த விரும்பும் பெண்களுக்கு இந்தத் திட்டம் ஆதரவளிக்கிறது. இத்திட்டம் மூலம் ரூ. 50000 வரை கடன் கிடைக்கும். வீடு அல்லது ஹோட்டல் வணிகத்திற்கான உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்களை வாங்க ஆரம்ப முதலீடாக இருக்கும். இதை 3 ஆண்டுகளுக்குள் திருப்பி செலுத்த வேண்டும். இதற்கு எவ்வித பிணையமும் தேவையில்லை.

### ஸ்டாண்ட்-அப் இந்திய திட்டம்

நிதி அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட ஸ்டாண்ட்-அப் இந்தியா திட்டம், பசுமைக்களத் திட்டத்தை அமைப்பதற்காக பெண் தொழில்முனைவோருக்கு ரூ. 10 லட்சம் முதல் ரூ. 1 கோடி வரை வங்கிக் கடன்களை வழங்குகிறது. இத்திட்டமும், எஸ்சி அல்லது எஸ்டி தொழில்முனைவோருக்காக கொண்டுவரப்பட்டதுதான்.

விண்ணப்பதாரர் ஒரு பெண் தொழில்முனைவோராகவோ அல்லது எஸ்சி/எஸ்டி பிரிவைச் சேர்ந்தவராகவோ இருக்க வேண்டும். ஒரு புதிய பிசினஸ் பிளானுடன் கடனுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் நிறுவனத்தில் குறைந்தபட்சம் 51% ஒரு பெண்ணுக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும். இந்த கடனுக்கான குறைந்தபட்ச திருப்பி செலுத்தும் காலம் 7 ஆண்டுகள் ஆகும்.

இத்திட்டம் பெண்கள் மற்றும் குழைந்தகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட பெண் தொழில்முனைவோர் திட்டமாகும். இந்த சலுகையைப் பெற விண்ணப்பதாரர்கள் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தில் ... சேர வேண்டும். இந்தத் திட்டம் பெண் தொழில்முனைவோர் ரூ. 50 லட்சம் வரை கடன்களை பெறலாம். மேலும், ரூ. 10 லட்சம் வரையிலான கடன்களுக்கு எந்த பிணையமும் தேவையில்லை.

### முத்ரா யோஜனா கடன் திட்டம் (PMMY)

பிரதான் மந்திரி முத்ரா யோஜனா, பெண் தொழில்முனைவோர் உட்பட சிறு வணிக உரிமையாளர்கக்கு ஒரு பெரிய மாற்றமாமக இருந்து வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், பெண்கள் மூன்று பிரிவுகளில் கடன்களைப் பெறலாம். குறிப்பாக இந்த கடன்களை எவ்வித பிணையமும் இல்லாமல் பெறலாம்.

1. ஷிஷு - தொடக்க நிறுவனங்கள் மற்றும் சிறிய வணிகங்களுக்கு ரூ. 50000 வரை கடன் கிடைக்கும்.

2. கிஷோர் - வளர்ந்து வரும் வணிகங்களுக்கு ரூ. 50000 முதல் ரூ. 5 லட்சம் வரை கடன் கிடைக்கும்.

3. தருண் - பெரிய நிறுவனங்களுக்கு ரூ. 5 லட்சம் முதல் ரூ. 10 லட்சம் வரை கிடைக்கும்.




# IMS & Auto-Populated GSTR-2B Handling

By: B Venkateswaran IRS, Assistant Commissioner Central GST (Retired)

This article outlines the process for handling auto-populated GSTR-2B data, specifically focusing on the treatment of inward supplies based on the correctness of the recipient's GSTIN. It details the actions to be taken based on eligibility and receipt status, providing a clear workflow for accepting, rejecting, or pending entries.

**Legal provisions:**

Section 16 of the GST Act lays down the eligibility criteria and conditions that a registered person must fulfill to avail Input Tax Credit (ITC) on goods or services, or both used or intended to be used in the course or furtherance of his business.

**Eligibility Criteria**

A registered person can avail ITC if the following conditions are met:

★ The registered person must possess a valid tax invoice or debit note issued by a supplier registered under GST. This document serves as the primary evidence for claiming ITC.

★ The registered person must have received the goods or services or both. In case of goods being delivered in installments, ITC can be availed upon receipt of the last installment.

★ The tax charged in respect of such supply has been actually paid to the government, either in cash or through utilization of ITC admissible in respect of the said supply.

★ The registered person must have furnished the return under section 39 of the CGST Act.

**Time Limit for Availing ITC**

A crucial aspect of Section 16 is the time limit within which ITC can be availed. ITC on any invoice or debit note can be availed till month of November following the end of the financial year to which such invoice or invoice relating to such debit note pertains.

Failure to claim ITC within this stipulated time frame results in the loss of the credit.

**Section 17:**

Section 17 deals with the apportionment of ITC when goods or services are used partly for business purposes and partly for other purposes, or partly for taxable supplies and partly for exempt supplies. It also specifies certain categories of supplies for which ITC is blocked.

Section 17(5) specifies certain supplies for which ITC is explicitly blocked, meaning that a registered person cannot avail ITC on these items, even if they are used for business purposes. Some of the key blocked credits include:

✓ ITC is generally not allowed on motor vehicles and conveyances, except when they are used for making taxable supplies of such vehicles or for transportation of passengers or goods.

✓ Food and Beverages, Outdoor Catering, Beauty Treatment, Health Services, Cosmetic and Plastic Surgery. ITC is not allowed on these expenses, except where they are obligatory for the employer under any law.

✓ Membership of a Club, Health and Fitness Centre

✓ Travel Benefits to Employees

✓ ITC is not allowed on works contract services when supplied for construction of an immovable property (other than plant and machinery), except where it is an input service for further supply of works contract service.

✓ ITC is not allowed on goods or services used for construction of an immovable property (other than plant and machinery) on own account, even when used in course or furtherance of business.

✓ Goods Lost, Stolen, Destroyed, Written Off or Disposed of by Way of Gift or Free Sample: ITC is not allowed on goods lost, stolen, destroyed, written off, or disposed of by way of gift or free samples.

Thus, Sections 16 and 17 of the GST Act are fundamental to understanding the provisions related to Input Tax Credit. Section 16 outlines the conditions for eligibility and the time limit for availing ITC, while Section 17 deals with the apportionment of credit and specifies the categories of supplies for which ITC is blocked. Businesses must carefully adhere to these provisions to ensure compliance and optimize their tax positions. Regular review of transactions and proper documentation are essential for availing ITC correctly and avoiding potential penalties.

Rule 36 - Documentary Requirements and Conditions for Claiming Input Tax Credit. This rule lays down what documents are needed and under what conditions a registered person can claim Input Tax Credit (ITC) under Section 16 of the CGST Act.

Sub-rule (1): Documents eligible for availing ITC



# மருத்துவ தகவல்

## மூட்டு வலிக்கும் வாயு கோளாறுக்கும் தொடர்புள்ளதா?

வாயு கோளாறுக்கும் தோள்பட்டை வலிக்கும் தொடர்பில்லை. தோள்பட்டை வலி உயர்த்த முடியாத அளவிற்கு கைகளில் வலி இவற்றுடன் அடிக்கடி ஏப்பம் வந்தால் வாயு கோளாறாக இருக்கலாம் என்பது பலரின் எண்ணம். பொதுவாக வாயு கோளாறு என்பது அஜீணத்தை குறிப்பது. அது வயிறு மற்றும் குடல் சார்ந்த பிரச்சினை. அரிதாக சிலருக்கு வயிற்று வலியை தோள்பட்டையில் உணர முடியும். அவ்வாறு வலி வந்தாலும் தோள்பட்டையை நன்றாக அசைக்கவும் உயர்த்தவும் முடியும். ஏப்பம் வருவதற்கும் தோள்பட்டை வலிக்கும் சம்பந்தமில்லை. இந்த இரு பிரச்சனைகளும் ஒரே நேரத்தில் இருந்தால் எலும்பியல் மற்றும் வயிறு மற்றும் குடல் பிரிவின் சிறப்பு மருத்துவர்கள் ஆலோசனையை பெற வேண்டியது அவசியம்.

– மரு. கே.என். சுப்பிரமணியன்,
வேல் மருத்துவமனை & வேல் சிறப்பு எழும்பியல் மையம்

[TO BE PUBLISHED IN THE GAZETTE OF INDIA, EXTRAORDINARY, PART II, SECTION 3, SUB-SECTION (ii)]

GOVERNMENT OF INDIA
MINISTRY OF FINANCE
DEPARTMENT OF REVENUE
CENTRAL BOARD OF INDIRECT TAXES AND CUSTOMS

NOTIFICATION
No. 15/2025 – Central Tax

New Delhi, the 17th day of September 2025

S.O. ......(E).— In exercise of the powers conferred by the first proviso to sub-section (1) of section 44 of the Central Goods and Services Tax Act, 2017 (12 of 2017), the Commissioner, on the recommendations of the Council, in respect of filing of annual return for the financial year 2024-25 onwards, hereby exempts the registered person whose aggregate turnover in any financial year is up to two crore rupees, from filing annual return that said financial year.

[F. No CBIC-20001/2/2025-GST]

(Raushan Kumar)
Under Secretary

## ரிட்டர்ன் தாக்கல் சம்பந்தமாக அரசு அறிவிப்பு

வருடாந்திர ரிட்டர்ன் தாக்கல் செய்வதற்கான விஷயத்தில், 2024-25 மற்றும் அதற்குப்பின் வரும் எந்த நிதியாண்டில் Aggregate Turnover இரண்டு கோடி ரூபாய்க்குள் இருந்தால், அந்த நிதியாண்டிற்கான வருடாந்திர ரிட்டர்ன் தாக்கல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. அதாவது Aggregate Annual Turnover 2 கோடிக்கு கீழ் உள்ளவர்களுக்கு விலக்கு அளிக்க வருடா வருடம் Notification கொடுப்பதற்கு பதிலாக இனி வரும் எல்லா வருடங்களுக்கும் ஒரே Notification ஆக கொடுக்கப்பட்டுள்ளது.




உ
விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!
ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்
விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்
91506-00904, 99940-18805, 78128-19162
கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.
SINCE-1993 31 Years 01-07-1993 2023 SVLS
வெள்ளி விழா கண்ட நிறுவனம்
அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்
தினசரி & கட்டிங் மாத காலண்டர் | 12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர் | தமிழ் டைரி ஆங்கில டைரி | 30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்
20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை | பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY | விபூதி கவர் 7 DAYS DELIVERY | சாமி படம் வுட்லேமினேசன் | ஸ்கூல் லேபிள்







நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!
Cell : 98421-18873, 98428-18873
R.R. பாலகுமார்
R.R. குபேந்திரன்
R.R. பிரேம்குமார்
e.mail : svlsmadurai@gmail.com


ஸ்ரீ முருகன் துணை
K.S. மோகன்லால்





ஹரிலால்
பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்
டிரைவர்கள் தேவை (ஸௌராஷ்ட்ரர்களுக்கு முன்னுரிமை)
98430 72626
98425 72626
* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்
குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்
No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
Cell: 90805 54802, 99424 90217



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# GST Instruction 06/2025: Risk-Based Provisional Sanction of Refunds

The Central Board of Indirect Taxes and Customs (CBIC) has outlined comprehensive guidelines for the provisional approval of GST refund requests through Instruction No. 06/2025-GST, issued on October 3, 2025. This process is guided by a system-driven identification mechanism and a rigorous risk assessment framework.

The same complies with the decision of the 56th GST Council meeting (September 3, 2025), which instructed an amendment to Rule 91(2) of the CGST Rules, 2017. Under the revised framework, 90% of refund claims can now be sanctioned provisionally in cases categorised as "low-risk" by the system. The motive of the revision is to ease the refund processing, reduce delays, and enhance trade facilitation.

**Key Highlights of CBIC Instruction No. 06/2025-GST**

- For the issuance of FORM GST RFD-02/RFD-03, refund processing must comply with timelines.
- Refund applications exhibiting as "low-risk" will be qualified for a 90% provisional sanction, as per the evaluation system.
- From October 1, 2025, as an interim measure, refund claims filed under IDS will be eligible for 90% provisional sanction till a formal amendment in Section 54(6) of the CGST Act is legislated.
- For provisional GST refund processing, GSTN has enabled functionality within the new procedure.
- Towards the particular matters where the officers assume the provisional refund must not be allotted, then they may record the reasons in writing and perform an assessment.
- Specific registered persons, notified under Notification No. 14/2025-Central Tax, shall not be qualified for provisional refunds concerning zero-rated supplies.

# Smooth handling of GST Certain instructions issued

Circular No.22/2019 - IW4/36394/2019 - Dated: 12.11.2019

Office of the Commissioner of Commercial Taxes,

Chepauk, Chennai -5.

There have been representations from the trading community to clarify whether e-way bill is required for single consignment with multiple invoices - for same consignor/consignee or one consignor with multiple consignees or multiple consignors with multiple consignees. In this regard, the following instructions are issued in order to enable smooth functioning of Roving Squad operations:

"Where same goods are transported by single consignor to single consignee in a single vehicle and the total value of consignment exceeds Rs. 100000/-(intrastate) and Rs. 50000/-(interstate) but the value of each invoice is below Rs. 100000/-(intrastate) and Rs. 50000/-(interstate), the Roving Squad officials are instructed to gather such data/invoices during interception & no penalty shall be levied. Instead, the details gathered as above shall be communicated to the jurisdictional proper officer, for verification & to ensure whether the same has been accounted for by the concerned dealer in the returns filed by them. The number of such cases intercepted & reported shall be one of the measurable performance indicators for the Roving Squad / Intelligence Wing".

All the Joint Commissioners, (Intelligence) are instructed to acknowledge the receipt of this circular at once and to get similar acknowledgements from their subordinate officials.

Sd/-T.V.Somanathan,
Additional Chief Secretary/
Commissioner of Commercial Taxes

# Major Procedural Relief on Post-sale Discounts!

CBIC has issued Circular No. 253/10/2025-GST (1st Oct 2025), marking a significant simplification in compliance requirements for post-sale/secondary discounts under Section 15(3)(b)(ii), CGST Act.

**Key Highlights:**

- The previous mechanism (Circular 212/6/2024-GST) mandated that, before treating post-sale discounts as non-taxable, suppliers had to obtain a CA/CMA certificate or recipient's undertaking as proof of corresponding ITC reversal. This process was cumbersome and a compliance hurdle for many businesses.
- The new circular WITHDRAWS this requirement entirely. Now, suppliers are no longer required to collect or submit any documentary proof (certificate/undertaking) of ITC reversal to exclude post-sale discounts via credit notes from taxable value under Section 15(3)(b)(ii).
- This move promotes uniformity and significant ease of doing business. Only the substantive legal conditions need to be met; no additional procedural documentation is required from suppliers.

**Field officers and taxpayers should note:**

Trade notices will follow, explicitly instructing that GST officers must not insist on such certificates/undertakings for these cases. Why is this important?

- Removes a key compliance bottleneck for legitimate post-sale/secondary discounts.
- Shifts the focus to substance over paperwork—fulfilling Section 15(3)(b)(ii) conditions is what matters.
- Aligns with the spirit of CBIC's recent clarification (Circular 251/08/2025-GST) that only "true and clear" discounts, not linked to other supply/service, are allowable as deduction (except for separate promotional/service agreements).

**Takeaway for Businesses & Professionals:**

- No more CA/CMA certifications or recipient ITC undertakings for each discount cycle.
- Maintain standard documentary trail for discounts and credit notes, but focus on legal essence, not certification paperwork.

# டிஜிலாக்கர் – பயன்பாடு மற்றும் வழிமுறைகள்

இன்றைய தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட காலகட்டத்தில் முக்கியமான ஆவணங்களின் பாதுகாப்பு மற்றும் வசதியான அணுகல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், பான் கார்டு மற்றும் பல முக்கிய ஆவணங்களை பாதுகாப்பாக சேமிப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் டிஜிட்டல் வடிவில் டிஜிலாக்கர் உதவுகிறது. இது இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட ஒரு புரட்சிகர டிஜிட்டல் தளமாகும். இந்த பதிவில் ஆவணங்களை உங்கள் டிஜிலாக்கர் கணக்கில் சேர்ப்பதற்கான படிப்படியான வழிமுறைகளை தெரிந்துகொள்ளுங்கள்.

முதலாவதாக, டிஜிலாக்கரைப் பயன்படுத்த, அதிகாரப்பூர்வ இணையதளத்திற்குச் சென்று, பதிவு என்ற பட்டனை கிளிக் செய்வதன் மூலம் கணக்கை உருவாக்கலாம். கிளிக் செய்தவுடன், அடையாள சரிபார்ப்பு நோக்கங்களுக்காக உங்கள் மொபைல் எண்ணை உள்ளிடும்படி கேட்கப்படுவீர்கள். உங்கள் மொபைல் எண் சரிபார்க்கப்பட்ட பிறகு, கடவுச் சொல்லை உருவாக்கி உங்கள் கணக்கை அமைக்கத் தொடரலாம்.

அடுத்த கட்டமாக, உங்கள் ஆதார் அட்டையை உங்கள் டிஜிலாக்கர் கணக்குடன் இணைக்க வேண்டும். இதற்கு உங்கள் ஆதார் எண்ணை உள்ளிட்டு, உங்கள் மொபைல் எண்ணுக்கு அனுப்பப்படும் ஓடிபி மூலம் சரிபார்க்க வேண்டும். வெற்றிகரமான சரிபார்ப்புக்குப் பிறகு, உங்கள் ஆதார் அட்டையின் டிஜிட்டல் நகலைப் பார்க்கலாம் மற்றும் பதிவிறக்கம் செய்யலாம்.

மேலும், பிறப்புச் சான்றிதழ்கள், மதிப்பெண் பட்டியல்கள் மற்றும் பாஸ்போர்ட் போன்ற பிற முக்கிய ஆவணங்களை உங்கள் டிஜிலாக்கர் கணக்கில் சேர்க்கலாம். இந்த ஆவணங்களைச் சேர்ப்பதற்கான நடைமுறையானது உங்கள் ஓட்டுநர் உரிமம் மற்றும் பான் கார்டைச் சேர்ப்பதற்கான நடைமுறையைப் போலவே உள்ளது.

டிஜிலாக்கரின் முக்கிய அம்சங்களில் ஒன்று உங்கள் ஆவணங்களை அரசு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். ஒரு ஆவணத்தைப் பகிர, நீங்கள் பகிர் என்பதை கிளிக் செய்து, நீங்கள் பகிர விரும்பும் ஆவணத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்னர், நீங்கள் பெறுநரின் மின்னஞ்சல் முகவரி அல்லது மொபைல் எண் ஆகியவற்றை உள்ளிட்டு அனுப்பலாம். இதை பெறுநர் ஆவணத்திற்கான இணைப்பைப் பெறுவார். அதை அவர்கள் பார்க்கலாம் மற்றும் பதிவிறக்கலாம்.

உங்கள் முக்கியமான ஆவணங்களைச் சேமிக்க டிஜிலாக்கரைப் பயன்படுத்துவது பல நன்மைகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, உங்களின் அனைத்து ஆவணங்களையும் ஒரே இடத்தில் சேமித்து வைப்பதற்கு பாதுகாப்பான மற்றும் எளிதில் அணுகக்கூடிய தளத்தை இது வழங்குகிறது. பிசிகல் நகல்களை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தைத் தவிர்க்கிறது மற்று அவற்றை இழக்கும் அபாயத்தைத் தடுக்கிறது. மேலும், உங்களின் அனைத்து ஆவணங்களும் டிஜிட்டல் வடிவத்தில் சேமிக்கப்பட்டுள்ளதால், எந்த நேரத்தில் எங்கிருந்தும் அவற்றை எளிதாகப் பெறலாம்.

பாதுகாப்பைப் பொறுத்தவரை, டிஜிலாக்கர் உங்கள் ஆவணங்களைப் பாதுகாக்க பல அம்சங்களைப் கொண்டள்ளது. டிஜிலாக்கரில் சேமிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களும் மேம்பட்ட குறியாக்க தரநிலை (AES) 256-பிட் குறியாக்கத்தைப் பயன்படுத்தி குறியாக்கம் செய்யப்படுகின்றன. இது வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் அதே குறியாக்கத் தரமாகும். கூடுதலாக, உங்கள் கணக்கை நீங்கள் பார்க்கும்போதும், பதிவு செய்யும்போது நீங்கள் அமைத்த கடவுச் சொல் மூலம் பாதுகாக்கப்படுகிறது. இறுதியாக, டிஜிலாக்கரில் டு-பேக்டர் அங்கீகார அமைப்பு உள்ளது. அது உங்கள் கணக்கை அணுக உங்கள் மொபைல் எண்ணுக்கு அனுப்பப்படும் ஓடிபி-ஐ உள்ளிட வேண்டும்.


## SPEED POST UPGRADED

REVISED TARIFF FOR SPEED POST DOMESTIC DOCUMENTS w.e.f. 01.10.2025

(Figure in ₹)

| Weight/Distance | Local | upto 200 Kms. | 201 to 500 Kms. | 501 to 1000 Kms. | 1001 to 2000 Kms. | Above 2000 Kms. |
|---|---|---|---|---|---|---|
| Up to 50 grams | 19 | 47 | 47 | 47 | 47 | 47 |
| 51 grams to 250 grams | 24 | 59 | 63 | 68 | 72 | 77 |
| 251 grams to 500 grams | 28 | 70 | 75 | 82 | 86 | 93 |

*GST as applicable

- 10% Discount to Students sending communication to educational institute* *From 1st November, 2025
- 5% additional discount to new contractual customer
- Registration facility also available as a value added service*
- OTP based delivery also available as a value added service* * Rs. 5/- (GST as applicable)
- Flat rate of discount to Bulk customer



# சாதனைகளின் சிகரம் சர்தார் படேல்



பாரதமாதா ஈன்றெடுத்த அருந்தவப்புதல்வர்களுள் முதன்மையானவர்களில் தலைமையானவர் நமது இரும்பு மனிதர் ஆவார். அக்டோபர் 31, 1875ல் அவதரித்த அந்த பெருமகனார்க்கு இப்போது நூற்று ஐம்பதாவது ஜெயந்தி விழா.

தமது இளமை காலந்தொட்டே குடும்பத்திற்காக தியாகம் செய்வதில் தொடங்கி, இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அவர் ஆற்றிய தொண்டுகளை தொடர்ந்து, சமஸ்தானங்களை ஒருங்கிணைத்ததில் உச்சத்தை அடைந்து, டிசம்பர் 15, 1950ல் அஸ்தமனம் ஆனது.

தமக்குக் கிடைத்த, வெளிநாட்டில் படிக்கும் வாய்ப்பை, தமது சகோதரருக்கு விட்டுக்கொடுத்த, தன்னலமற்றவர். இவரது அண்ணனின் பெயர் V.Patel (விட்டல்பாய்) இவர் பெயரும் V.Patel (வல்லபாய்) என்பதால் இந்த மாற்றத்திற்கு சாதகமாகிவிட்டது.

நீதிமன்றத்தில், ஒரு வழக்கிற்காக குறுக்கு விசாரணை செய்து கொண்டிருந்தபோது, பட்டேலுக்கு ஒரு கடிதம் வருகிறது. அதனை பிரித்துப்பார்த்துவிட்டு, கோட் பையில் வைத்துக்கொண்டு, தனது வாதத்தைத் தொடர்கிறார். அதில் வாகை சூடினார். பிறகுதான் அங்கு கூடியிருந்தவர்களுக்கு தெரிகிறது, அந்தக் கடிதம் படேலின் மனைவி இறந்துவிட்டார் என்ற செய்தியைத் தாங்கி வந்தது என்று. விவேகானந்தர் உரைத்த எஃகு இதயம் என்பது படேலுடையது தானோ!!! மறுமணம் செய்துகொள்ளாமல் தமது இரண்டு குழந்தைகளை வளர்த்து வெற்றிடத்தை வெற்றி கொண்டார்.

கோத்ரா என்றால் இன்றைய தலைமுறையினருக்கு ரயில் எரிப்பு சம்பவம் தான் நினைவுக்கு வரும். அதே கோத்ராவில் 1917ல் சுதந்திரச் சுடர் புறப்பட்டது. ஆம், அந்த வருடத்தில் தான் மகாத்மாவும் படேலும் முதன்முதலாக சந்திக்கின்ற சரித்திரம் அங்கு நிகழ்கின்றது. அதன்பிறகு உப்பு சத்தியாகிரகத்தின் காரணமாக இருவரும் 1931ல் சிறைக்கு சென்றபோது, அவர்களின் நெருக்கம் ஆத்மார்த்தம் ஆனது.

படேலுக்கு சர்தார் என்ற அடைமொழி மகாத்மாவால் வழங்கப்பட்டது. படைத்தலைவன் என்பதை குறிக்கும் இந்த பட்டம் படேலைத்தவிர வேறு யாருக்கு பொருந்தும்?

அகமதாபாத் நகராட்சியின் துப்புரவு ஆணையராக இருந்தபோது, நகரின் உட்கட்டமைப்பை மேம்படுத்தினார். சுத்தம், சுகாதாரம் போன்றவைகளை வலியுறுத்தி நடைமுறைக்கு கொண்டுவந்தார். குஜராத் மாநிலம் இவற்றில் இன்றளவும் முன்மாதிரியாக திகழ்வதற்கு இவரது ஆரம்பகால அதிரடி நடவடிக்கைகள் தான் காரணம் எனலாம்.

குஜராத்தில் 1930களில் ப்ளேக் நோய்த்தொற்று பரவியபோது தனது உடல்நலத்தை பணையம் வைத்து, சேவைகள் புரிந்தார். இப்படிப்பட்ட மனிதாபிமானமிக்க செயல்களால் பண்பட்ட தலைவராக மிளிர்ந்தார்.

ஏராளமான சாத்விக போராட்டங்களுக்குத் தலைமையேற்று பலமுறை சிறை சென்றார். அதில் குறிப்பிடத்தக்கது, வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கம். அனல் பறக்கும் தமது மேடைப் பேச்சால், சாதாரண மக்கள்கூட சுதந்திரப்போராட்டத்தில் கலந்து கொள்ளும் உத்வேகம் பிறந்தது. நாடு விடுதலை அடைவதற்கு இவரது பங்களிப்பு மிக அதிகம்.

சுதந்திரத்திற்குப் பிறகு, பிரதமர் பதவி இவரைத் தேடி வந்த போதும், மகாத்மாவின் வேண்டுகோளுக்கு இணங்கி, இதையும் தியாகம் செய்தார். துணைப்பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சராக பொறுப்பேற்று சில குறுநில மன்னர்களின் குறுக்கு புத்தியை நேர்த்தியாக கையாண்டு, ஒன்றிய பாரதத்தை உருவாக்கினார்.

திருவாங்கூர் மற்றும் ஹைதராபாத் சமஸ்தானங்களை எதிர்கொண்டு அவைகளை வழிக்குக் கொண்டுவந்த சாணக்கியத்தனம், அவர்தம் ஆளுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. பதவியை விரும்பாமல், தமக்கிட்டப் பணியை செவ்வனே நிறைவேற்றிய அவருடைய ஆற்றல், போற்றத்தக்கது. சோம்நாத் கோயிலை புணரமைத்தது இவரது வாழ்நாள் சாதனைகளில் ஒன்று.

500க்கும் மேம்பட்ட சமஸ்தானங்களை சமாதானப்படுத்தி இணைத்ததனால், இவரது சிலை, நர்மதா நதிக்கரையில், 500க்கும் அதிகமான அடி உயரத்தில் (597) நிறுவி, இவரது பெருமையை பறைசாற்றுகிறது. சர்தாரின் அர்ப்பணிப்பிற்கு அடையாளமாக இந்த ஒற்றுமையின் சிலை என்றென்றும் அவரின் புகழை ஒலித்துக்கொண்டே இருக்கும்.

ஜெய்ஹிந்த்

*– வீரஜா*

# Health insurance reimbursement: Key rules

A few simple checks can save your claim from being delayed or rejected

### When to file a reimbursement claim

- If the insurer has rejected cashless claim
- For pre-and-post hospitalisation expenses
- If the hospital is not within insurer's network

### What to do during hospitalisation

- Inform insurer within 24 hours
- Note down claim intimation number
- Keep all paid receipts
- Save doctor's prescriptions
- Collect reports, OT notes & pharmacy bills
- Ensure discharge summary is doctor-signed
- Get itemised final bill with breakup

### How to file a reimbursement claim


- Download insurer's claim form
- Fill Part A; hospital fills Part B*

- **Prepare document submission bundle**
- Submit scanned copies online (website/email)
- Keep originals; insurer may request them
- Use clear subject line with policy no. & patient name
- Attach PDFs; avoid unclear images
- Submit claim
- Get acknowledgement in a few days
- Share extra documents/ clarifications promptly if asked

...Continued on Slide 2

*Part B not needed for pre- & post-hospital expenses






GOPAKUMAR WARRIER/MINT

# Submission bundle for reimbursement

### Arrange following personal documents

- ✓ Policy document
- ✓ ID proof (Aadhaar/Passport)
- ✓ PAN (if requested)
- ✓ Cancelled cheque/ bank details for NEFT
- ✓ Copy of your insurance card

### KEY POINTS

- File reimbursement within 30 days of discharge
- Claims may be denied after 30 days
- Check list of blacklisted hospitals for non-network cases
- Claims from blacklisted hospitals will be rejected

### Final bundle (follow the order)

- Filled & signed claim form
- Policy copy & insurance card
- Discharge summary/ admission note
- Final hospital bill+paid receipts
- Pharmacy bills, doctor fees, investigation bills (itemised)
- Prescriptions, investigation reports, OT notes
- KYC: ID proof, PAN, cancelled cheque






GOPAKUMAR WARRIER/MINT









Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்

JSW Steel





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj®

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...




## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

## VIGNESH GRAPHICS

*All Kinds of Printing Solution*



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.

Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

100 YEARS SRB SINCE 1901

PRIDE OF MADURAI
SINCE 1901

S.S.KISHORILAL
92445 00633
0452 - 3558788

## SRB SILKS HOUSE

**Fashion Creators in Silk Sarees**

402 LG Complex, K.K.Nagar, Madurai - 625 020. Opp Sundaram Park / Near UCO Bank

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 27.10.2025 / BPC MDU
Date of Publication 20th of Every Month

KSPL,Madurai

**Kuttuva Silicates (P) Ltd.,**

5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846



Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid

VSOC — Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement


**வேல் மருத்துவமனை**

**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL — RIGHT TREATMENT IS EVERYONE'S RIGHT

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




சிறப்பம்சங்கள்

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*




**Official Publication:**
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com